சார்பு நீதிமன்றம், மேலூர்
நாள்: 11.02.2026
வா.சா.1 –நூர்ஜஹான் W/o கருணாநிதி என்ற காதர்மைதீன்
O.S. No.111/2019
(சாட்சி மனுவின் பேரில் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.)
குறுக்கு விசாரணை :

அல்அமீன் உருது தமிழ் துவக்கப்பள்ளியில் நான் தலைமை ஆசிரியராக பணியாற்றி வருகிறேன். எனக்கு திருமணம் நவம்பர் 2000மாவது ஆண்டு நடந்தது. எனது திருமணம்பள்ளிவாசலில் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது. என் தாயார் பெயர் சாகிதா பீவி. என் தாயார் பெயர் ஆயிசா பீவி என்றால் சரியல்ல. என் தகப்பனார் பெயர் சம்சுதீன். என் பெற்றோருக்கு நடந்த திருமணமும் பள்ளிவாசலில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி பள்ளிவாசலில் உள்ள பதிவேட்டை பார்த்தால் என் தாயார் பெயர் சாகிதா பீவியா, அல்லது ஆயிசா பீவியா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். சாகிதா பீவியின் தாயார் பெயர் மகபூப் பீவி. மகபூப் பீவியின் கணவர் பெயர் முகமது இப்ராகிம். அவரை இப்ராகிம் ராவுத்தர் என்று வழக்கத்தில் அழைப்பார்கள். மேற்படி மகபூப் பீவிக்கும், இப்ராகிம் ராவுத்தருக்கும் குழந்தைகள் கிடையாது என்றால் சரியல்ல. என் தாயார் மகள் ஆவார். என் தாயார் மகபூப் பீவிக்கும் - இப்ராகிம் ராவுத்தருக்கும் பிறந்தவர் என்பதை நிருபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் என்னுடைய ஆயுள் வரை குடியிருந்து அனுபவித்து வரவேண்டும் என்று முத்தலிப் ராவுத்தர், மகபூப் பீவிக்கும் - இப்ராகிம் ராவுத்தருக்கும் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் தான செட்டில்மெண்ட் என்று கூறப்படவில்லை என்றும் செட்டில்மெண்ட் என்று தான் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் அவர்களுடைய ஆயுளுக்கு பின்னர் முத்தலிப் ராவுத்தரும் அவருடைய

வாரிசுகளும் ஆண்டு அனுபவித்து கொள்ள வேண்டியது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்தில் கிழக்கு பக்கம் நான்குமாலில் முத்தலிப்பு ராவுத்தரின் வீடு இருப்பதாக கண்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தானது மேற்படி ஆவணத்தில் கண்டுள்ள சொத்தையும், கிழக்கு பக்கத்தில் உள்ள முத்தலிப்பு ராவுத்தரின் வீட்டையும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மகபூப் பீவி 1977ம் ஆண்டு காலமானார். மேற்படி முத்தலிப்பு ராவுத்தர், மகபூப் பீவி தன்னுடைய உடன்பிறந்த அக்கா என்பதாலும், உனக்கு நாளது தேதி வரை ஆண், பெண் வாரிசுகள் இல்லை என்பதாலும், அவருக்கு குடியிருக்க வீடு இல்லை என்பதாலும் அவருடைய சொத்தை ஆயுட்காலம் வரை அனுபவித்து கொள்ளவேண்டியது என்று குறிப்பிட்டள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.1 பத்திரத்தின் படி மகபூப் பீவிக்கும், இப்ராகிம் ராவுத்தருக்கும் குழந்தைகள் இல்லை என்பது நிருபணமாகிறது என்றால் பத்திரத்தில் அவ்வாறு கண்டுள்ளது ஆனால் என் தாயார் தான் வாரிசு. என் தாயார் எந்த வருடத்தில் பிறந்தார் என்றால் வருடம் தெரியாது. சாகிதா பீவி, மெகபூப்பீவிக்கும் - இப்ராகிம் ராவுத்தருக்கும் பிறந்த வாரிசுகள் இல்லை என்றால் சரியல்ல. அதற்கான ஆவணம் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மகபூப் பீவியுடன் பிறந்த சகோதரி ஆயிசா பீவி என்றும், அவர் உடன்பிறந்த சகோதரிகள் வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். மகபூப் பீவி உடன்பிறந்த சகோதர-சகோதரிகள் யார் யார் என்பதை நிருபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். முத்தலிப் ராவுத்தர் தான் மகபூப் பீவி உடன்பிறந்த சகோதரர் என்பதை நிருபிக்க பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி வா.சா.ஆ.1 பத்திரத்தை எழுதி வைத்த நபருடைய பேரன்கள் தான் முகமது அப்துல்லா மற்றும் முகைதின் அப்துல் காதர் இந்த வழக்கின் பிரதிவாதிகள் என்றால் சரிதான். முகமது முத்தலிப்பு ராவுத்தரின் மகன் பெயர் மீரா மைதீன் என்றால்

சரிதான். முகமது இப்ராகிம் ராவுத்தர் 1960ம் ஆண்டு காலமாகிவிட்டார். மகபூப் பீவி இறந்தவுடன் வழக்கு சொத்தானது முத்தலிப் ராவுத்தரின் மகனான மீராமைதீன் மற்றும் இந்த வழக்கின் பிரதிவாதிகள் முகமது அப்துல்லா, மற்றும் முகைதீன் அப்துல் காதர் ஆகியோருக்கு சென்றுவிட்டது என்றால் சரியல்ல. நாங்கள் தான் அனுபவித்து வருகிறோம். நான் தவறாக சொல்கிறேன் என்றும், வழக்கு சொத்தின் ஒருபகுதியில் என் தாயார் தங்கிவந்ததால் ஆயிசா பீவி அதற்கு வாடகை செலுத்திவந்தார் என்றால் சரியல்ல. என் தாயார் பெயர் சாகிதா பீவி. வாடகை எதுவும் நாங்கள் கொடுக்கவில்லை. நான் 1977ம் ஆண்டு 4ம் வகுப்பு படித்து கொண்டிருந்தேன். நான் பிறந்த வருடம் 1968. என் அப்பா பெயர் சம்சுதீன் அவர் தான் இந்த வழக்கின் 1ம் வாதி ஆவார். 2ம் வாதி மஸ்தான் அலி என் உடன்பிறந்த அண்ணன், அவரும் இறந்துவிட்டார். 1977ம் ஆண்டு மகபூப் பீவி காலமான போது நான் 4ம் வகுப்பு படித்து வந்ததால் சொத்து சம்பந்தப்பட்ட விபரங்கள் முழுமையாக தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை என்றால் சொந்த வீடு என்று எண்ணி வாழ்ந்து வந்தோம். வழக்க சொத்தின் கிழக்கு பகுதியில் முத்தலிப்பு ராவுத்தர் மகனான மீராமைதீன் குடியிருந்து வந்தார் என்றால் சரியல்ல யாரும் குடியிருக்கவில்லை. அவர் தென்காசியில் தான் வசித்து வந்தார்.

(வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.02.11 21:38:50 +0530

Sub Judge
Melur